# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 369/2024

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | கனகராஜ் |
| Father's Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 11.02.2026.

**1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தாந்தோணிமலையில் குடியிருந்து பிளிப்காட் நிறுவனத்தில் கொரியர் டெலிவரி வேலை செய்து வருகிறேன். கடந்த 14.04.2024ம் தேதி சுங்ககேட்டிலிருந்து தாந்தோன்றிமலையிலுள்ள எனது வீட்டிற்கு டிவிஎஸ்

எக்சல் வாகனத்தில் நான் சென்றுகொண்டிருந்தேன். ஸ்டார் மளிகை கடையில் மளிகை சாமான்கள் வாங்க சென்றபோது இருசக்கர வாகனத்தின் டேண்க் கவரில் ஓப்போ என்ற செல்போனை வைத்துவிட்டு மளிகை சாமான் வாங்கிவிட்டு திரும்ப வந்தபோது செல்போனை காணவில்லை. தேடி பார்த்தும் செல்போன் கிடைக்கவில்லை. பிறகு 1 மாதம் கழித்து தாந்தோன்றிமலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். செல்போனின் மதிப்பு சுமார் ரூ. 18,000/– ஆகும். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் மனு அ.ச.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் தாந்தோன்றிமலை போலிசார் செல்போனை கண்டுபிடித்துவிட்டதாக சொன்னதன்பேரில் காவல் நிலையம் சென்றேன். எனது செல்போனை அடையாளம் காட்டினேன். பின்னர் நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து செல்போனை பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள ரெட்மீ செல்போன் என்னுடையது. **அந்த போட்டோ அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

இல்லை.

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பில்)**

14.04.2024ம் தேதி எனது செல்போன் காணாமல் போனது. சம்பவ சமயத்தில் பாக்கெட் வைத்த சட்டைதான் அணிந்திருந்தேன். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 1 1/2 கி.மீ. இடைவெளி இருக்கும். சம்பவம் நடந்த அன்று எனது செல்போன் காணாமல் போனதாக தகவல் சொன்னேன். அன்று போலிசார் அன்றை தினமே என்னிடம் புகார் எழுதி வாங்கிக் கொண்டார்கள். நான் எம்.ஏ. படித்துள்ளேன். 08.05.2024ம் தேதி மேற்படி காவல் நிலையத்திற்கு சென்று புகாரை கொடுத்தேன். ஒரே ஒரு செல்போன் காணாமல் போனதாக எழுதிக் கொடுத்தேன். போலிசார் என்னை

விசாரித்தபோது இரண்டு செல்போன்கள் காணாமல் போனதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் சொல்வது போல எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய செல்போனை வேறு விதத்தில் தொலைத்துவிட்டு ஒரு பொய்யான புகாரை கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செல்போன் என்னுடையதுதான் என்பதற்கான ஆதாரங்களை போலிசார் விசாரணையில் கொடுத்தேன். அவர்கள் வாங்கிக் கொண்டார்கள். பொதுவாக அனைவரும் தனது செல்போனை மேல் பாக்கெட்டில்தான் வைப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**